# சுதேச மருத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவகம் (PGIIM)

# கொழும்புப் பல்கலைக்கழகம்

## வெற்றிடம் - முகாமைத்துவ உதவியாளர் பதவி (கணக்கு பேணுதல்) - தரம் - III

முகாமைத்துவ உதவியாளர் தரம் III (கணக்கு பேணுதல்) பதவிக்காக பொருத்தமான தகைமை வாய்ந்த நபர்களிடமிருந்து கொழும்புப் பல்கலைக்கழகத்தின் சுதேச மருத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவகத்தினால் 2025-05-26ஆம் திகதி வரை விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**தகைமைகள்:**

(01) க.பொ.த (சா/த) பரீட்சையில் பின்வரும் பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

i. சிங்கள மொழி / தமிழ் மொழி

ii. ஆங்கில மொழி / ஆங்கில இலக்கியம்

iii. கணிதம்

**மற்றும்**

(02) க.பொ.த (உ/த) பரீட்சையில் ஒரே அமர்வில் சகல பாடங்களிலும் (சாதாரண பொதுப் பரீட்சை தவிர) சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

*குறிப்பு: பின்வருவனவற்றைக் கொண்டவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.*

(அ) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திலிருந்து பெற்றுக்கொண்ட ஆறு (06) மாத காலத்திற்குக் குறையாத கணனி பிரயோகத்தில் (computer application) ஏற்றுக்கொள்ளக்கூடிய தகைமை

மற்றும்

(ஆ) கணனிப் பிரயோக பொதிகளைப் பயன்படுத்துவதில் இரண்டு வருடகால அனுபவம்.

**பதவிக்கான குறிப்பிடத்தக்க தகைமைகள்:**

(அ) திறன் அபிவிருத்தி மற்றும் தொழிற் பயிற்சி அமைச்சின் கீழ் உள்ள இலங்கை தொழில்நுட்பக் கல்லூரி / தொழில்நுட்பவியல் கல்லூரியின் கணக்கியல் தொழில்நுட்பவியலாளர்களுக்கான தேசிய சான்றிதழ் அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திலிருந்து பெற்றுக்கொண்ட இதற்கு நிகரான வேறு ஏதாவது தகைமைகள்.

அல்லது

(ஆ) க.பொ.த (உ/த) பரீட்சையில் வர்த்தகப் பாடப்பரப்பில் தகைமைகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.

(அ) இலங்கைப் பிரஜையாக இருக்க வேண்டும்.

(ஆ) விண்ணப்பம் முடிவுறுத்தப்படும் நாளில் 18 வயதிற்குக் குறையாமலும் 30 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.

(இ) சிறந்த நடத்தையுடையவராக இருக்க வேண்டும்.

**தெரிவுகள்** : எழுத்துமூலப் பரீட்சை மற்றும் நேர்முகத் தேர்வின் மூலம்

**சம்பள அளவு** : மாதாந்தம் ரூபா 49,475- 17×540 - 58,655, 01.01.2025 U MN 1(III) இன் பிரகாரம்.

**நன்மைகள்:**

01. தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் தங்கள் சம்பளம் மற்றும் அடிப்படை சம்பளத்தில் பத்து சதவீதத்திற்கு (10%) சமமான தொகையை மாதாந்த அடிப்படையில் கழித்துக்கொண்டு பல்கலைக்கழக சேமலாப நிதியத்திற்கு பங்களிக்கத் தொடங்குவார்கள். மேலும், பல்கலைக்கழகம் தனது வருவாயில் ஏழு சதவீதத்திற்கு (7%) சமமான தொகையை பல்கலைக்கழக சேமலாப நிதியத்திற்கும், அதன் வருவாயில் எட்டு சதவீதத்திற்கு (8%) ஓய்வூதிய நிதியத்திற்கும் தனது சொந்த நிதியிலிருந்து பங்களிப்பை வழங்கும்.
02. ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கான ஒதுக்கீட்டு அடிப்படையில், அவரது அடிப்படைச் சம்பளத்தின் மூன்று (3%) சதவீதத்தை பல்கலைக்கழகம் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு பங்களிப்பு செய்யும்.
03. மேற்கூறிய சம்பளத்திற்கு மேலதிகமாக, வாழ்க்கைச் செலவுப் படி மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய கொடுப்பனவுகள் பொருத்தமான இடங்களில் ஊழியர்களுக்கு வழங்கப்படும்.

**எவ்வாறு விண்ணப்பிப்பது:**

விண்ணப்பப் படிவங்கள் மற்றும் தொடர்புடைய விபரங்களை https://pgiimed.cmb.ac.lk எனும் PGIIM இணையதளத்திலிருந்து தரவிறக்கம் செய்துகொள்ளலாம்.

முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட பரிந்துரைக்கப்பட்ட படிவத்திலான விண்ணப்பங்களை இயைபுடைய கல்விச் சான்றிதழ்கள், தொழில்சார் மற்றும் சேவைச் சான்றிதழ்களின் சான்றுபடுத்திய பிரதிகள் சகிதம் 2025-05-26ஆம் திகதி அல்லது அதற்கு முன் சிரேஷ்ட உதவிப் பதிவாளர், சுதேச மருத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவகம், 5ஆம் தளம், ஆயுர்வேத போதனா வைத்தியசாலை, கொட்டா வீதி, பொரளை எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் குறிப்பிட வேண்டும்.

பல்கலைக்கழக முறைமை / அரசாங்கத் திணைக்களங்கள் / கூட்டுத்தாபனங்கள் / நியதிகள் சட்ட சபைகள் பணியாற்றும் விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்பங்களை தமது நிறுவனத்தின் தலைமையின் ஊடாக அனுப்ப வேண்டும்.

**பணிப்பாளர்,**
**சுதேச மருத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவகம்.**